செ.வெ.எண்: 46 நாள்: 18.11.2016

**புதுக்கோட்டை மாவட்டத்தில் 18 வயது பூர்த்தியடைந்த அனைத்து நபர்களையும் டிசம்பர் இறுதிக்குள் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க அலுவலர்கள் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் - புதுக்கோட்டை மாவட்ட வரைவு வாக்காளர் பட்டியல் பார்வையாளர் மற்றும் கோ-ஆப்டெக்ஸ் மேலாண்மை இயக்குநர் திரு.டி.என்.வெங்கடேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் 2017 வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடுவது தொடர்பாக மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு பணிகள் குறித்து அங்கீகரிக்கப்பட்ட அனைத்து அரசியல் கட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் மாவட்ட தேர்தல் அலுவலர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (18-11-2016) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் புதுக்கோட்டை மாவட்ட வரைவு வாக்காளர் பட்டியல் பார்வையாளர் மற்றும் கோ-ஆப்டெக்ஸ் மேலாண்மை இயக்குநர் திரு.டி.என்.வெங்கடேஷ்,இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு துறை சார்ந்த அலுவலர்கள், அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகளுடன் ஆய்வு மேற்கொண்ட பின்பு பேசியதாவது:

இந்திய தேர்தல் ஆணையம் உத்தரவின்படி 2017ம் ஆண்டில் வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடும் வகையில் அனைத்து மாவட்டங்களிலும் வரைவு வாக்காளர் பட்டியலில் தகுதியுள்ள 18 வயது பூர்த்தியடைந்த நபர்களை வாக்காளர்களாக பெயர் சேர்த்தல் மற்றும் இறந்தவர்களின் பெயர் நீக்கம் போன்ற பல்வேறு பணிகளை மேற்கொள்ள உத்தரவிட்டுள்ளது. அதனடிப்படையில் புதுக்கோட்டை மாவட்டத்தில் 2017 வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடும் வகையில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு பணிகள் குறித்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்களுடன் ஆலோசனை செய்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இக்கூட்டத்தில் புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள 6 சட்டமன்ற தொகுதிகளிலும் சிறப்பு முகாம் மற்றும் தினசரி அலுவலக வேலை நாட்களில் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட படிவம் 6, படிவம் 7, படிவம் 8 மற்றும் படிவம் 8ஏ மூலம் குறித்த தகவல்கள் கேட்டறியப்பட்டது. மேலும் 1.9.2016 அன்று வெளியிடப்பட்ட வரைவு வாக்காளர் பட்டியலின்படி 178.கந்தர்வக்கோட்டை தனி சட்டமன்ற தொகுதியில் 94346 ஆண் வாக்காளர்களும், 91784 பெண் வாக்காளர்களும், 7 மூன்றாம் பாலினத்தவர்களும் என மொத்தம் 186137 வாக்காளர்களும், 179.விராலிமலை சட்டமன்ற தொகுதியில் 101114 ஆண் வாக்காளர்களும், 100756 பெண் வாக்காளர்களும், 3 மூன்றாம் பாலினத்தவர்களும் என மொத்தம் 201873 வாக்காளர்களும், 180.புதுக்கோட்டை சட்டமன்ற தொகுதியில் 111776 ஆண் வாக்காளர்களும், 115515 பெண் வாக்காளர்களும், 7 மூன்றாம் பாலினத்தவர்களும் என மொத்தம் 227298 வாக்காளர்களும், 181.திருமயம் சட்டமன்ற தொகுதியில் 101780 ஆண் வாக்காளர்களும், 105179 பெண் வாக்காளர்களும் என மொத்தம் 206959 வாக்காளர்களும், 182.ஆலங்குடி சட்டமன்ற தொகுதியில் 98661 ஆண் வாக்காளர்களும், 99599 பெண் வாக்காளர்களும், 1 மூன்றாம் பாலினத்தவரும் என மொத்தம் 198261 வாக்காளர்களும், 183.அறந்தாங்கி சட்டமன்ற தொகுதியில் 105799 ஆண் வாக்காளர்களும், 106670 பெண் வாக்காளர்களும் என மொத்தம் 212469 வாக்காளர்களும் என ஆக மொத்தம் 6 சட்டமன்ற தொகுதிகளிலும் 613476 ஆண் வாக்காளர்களும், 619503 பெண் வாக்காளர்களும், 18 மூன்றாம் பாலினத்தவர்களும் என மொத்தம் 1232997 வாக்காளர்கள் இருந்தனர்.

..2..

சிறப்பு சுருக்க முறைத்திருத்தம் 2017 உள்ளாட்சி தேர்தல்களை முன்னிட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட சேர்த்தல் மற்றும் நீக்கல் உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டது. இதன்படி 178.கந்தர்வக்கோட்டை தனி சட்டமன்ற தொகுதியில் 1627 வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தலும், 375 வாக்காளர் பட்டியலில் பெயர் நீக்கமும், 179.விராலிமலை சட்டமன்ற தொகுதியில் 1647 பெயர் சேர்த்தலும், 2 பெயர் நீக்கமும், 180.புதுக்கோட்டை சட்டமன்ற தொகுதியில் 1290 பெயர் சேர்த்தலும், 608 பெயர் நீக்கமும், 181.திருமயம் சட்டமன்ற தொகுதியில் 1940 பெயர் சேர்த்தலும், 32 பெயர் நீக்கமும், 182.ஆலங்குடி சட்டமன்ற தொகுதியில் 1192 பெயர் சேர்த்தலும், 14 பெயர் நீக்கமும், 183.அறந்தாங்கி சட்டமன்ற தொகுதியில் 2086 பெயர் சேர்த்தலும், 6 பெயர் நீக்கமும் என 6 சட்டமன்ற தொகுதிகளிலும் மொத்தம் 9782 பெயர் சேர்த்தலும், 1037 பெயர் நீக்கமும் மேற்கொள்ளப்பட்டது.

இதன் மூலம் 03.10.2016 அன்று வரை மேற்கொள்ளப்பட்ட வரைவு வாக்காளர் பட்டியல் 2017ன்படி 178.கந்தர்வக்கோட்டை தனி சட்டமன்ற தொகுதியில் 94891 ஆண் வாக்காளர்களும், 92491 பெண் வாக்காளர்களும், 7 மூன்றாம் பாலினத்தவர்களும் என மொத்தம் 187389 வாக்காளர்களும், 179.விராலிமலை சட்டமன்ற தொகுதியில் 101796 ஆண் வாக்காளர்களும், 101719 பெண் வாக்காளர்களும், 3 மூன்றாம் பாலினத்தவர்களும் என மொத்தம் 203518 வாக்காளர்களும், 180.புதுக்கோட்டை சட்டமன்ற தொகுதியில் 112029 ஆண் வாக்காளர்களும், 115944 பெண் வாக்காளர்களும், 7 மூன்றாம் பாலினத்தவர்களும் என மொத்தம் 227980 வாக்காளர்களும், 181.திருமயம் சட்டமன்ற தொகுதியில் 102618 ஆண் வாக்காளர்களும், 106249 பெண் வாக்காளர்களும் என மொத்தம் 208867 வாக்காளர்களும், 182.ஆலங்குடி சட்டமன்ற தொகுதியில் 99146 ஆண் வாக்காளர்களும், 100293 பெண் வாக்காளர்களும் என மொத்தம் 199439 வாக்காளர்களும், 183.அறந்தாங்கி சட்டமன்ற தொகுதியில் 106727 ஆண் வாக்காளர்களும், 107822 பெண் வாக்காளர்களும் என மொத்தம் 214549 வாக்காளர்களும் என ஆக மொத்தம் 6 சட்டமன்ற தொகுதிகளிலும் 617207 ஆண் வாக்காளர்களும், 624518 பெண் வாக்காளர்களும், 17 மூன்றாம் பாலினத்தவர்களும் என மொத்தம் 1241742 வாக்காளர்கள் உள்ளனர்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் வரைவு வாக்காளர் பட்டியலை தயார் செய்யும் அரசு அலுவலர்கள் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரமுகர்கள் கூறும் கருத்துக்களை கேட்டறிந்து அதன் குறைகளை களையும் வகையில் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். கிராம நிர்வாக அலுவலர்களிடம் உள்ள இறப்பு சான்றிதழ் பதிவேடுகளின் மூலம் தகவல்களை பெற்று வாக்காளர் பட்டியலில் இறந்தவர்களின் பெயர் நீக்கம் செய்வதுடன் 18 வயது பூர்த்தியடைந்த அனைத்து நபர்களையும் டிசம்பர் மாதம் இறுதிக்குள் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்றும் புதுக்கோட்டை மாவட்ட வரைவு வாக்காளர் பட்டியல் பார்வையாளர் மற்றும் கோ-ஆப்டெக்ஸ் மேலாண்மை இயக்குநர் திரு.டி.என்.வெங்கடேஷ்,இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.ராமசாமி, புதுக்கோட்டை சார் ஆட்சியர் திரு.எஸ்.பி.அம்ரித்,இ.ஆ.ப., வருவாய் கோட்டாட்சியர்கள் திரு.மு.வடிவேல்பிரபு (இலுப்பூர்), திருமதி.இரா.இரம்யாதேவி (அறந்தாங்கி), மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திருமதி.சாந்தி, அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**